**கம்பம் நகராட்சி**

**2020–ஆம் ஆண்டு ஜூன் மாதம் (30.06.2020) ஆம் நாள் செவ்வாய் கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

**கூட்டப் பொருட்கள்**

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 06/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 06/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | |
| **3.** | கம்பம் நகராட்சி 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, **68,090** ஆகும். இந்நகராட்சியானது 1958–ம் ஆண்டு முதல் முதல்நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் 103.52 கி.மீ நீளம் சாலைகள், சுமார் 185 எண்ணம் தெருக்களை உள்ளடக்கியது ஆகும். கம்பம் நகராட்சியின் அருகில் அண்டை மாநிலமான கேரளா சுற்றுலா ஸ்தலமாக உள்ளதாலும், மேலும் அவ்விடம் விளையும் தேயிலை, ஏலக்காய், மிளகு, தேங்காய்.., போன்ற மக்களின் அத்தியாவசிய பொருள்களை வெளியூர் சந்தை விற்பனைக்காக தினந்தோறும் கம்பம் நகருக்குள் சுமார் 20,000 நபர்கள் வந்து செல்கின்றனர்.<br>கம்பம் நகராட்சியின் மூலம் ஏற்கனவே பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக சுருளிப்பட்டி அருகே ஆற்றுப்படுகையில் தலைமை நீரேற்று நிலையம் 2013 – 14–ல் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சுமார் நாள் ஒன்றுக்கு 20 இலட்சம் லிட்டர் குடிநீர் நீருந்து மூலம் எடுக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில், கம்பம் நகர் மக்களுக்கு அரசு விதிகளின் படி, நாள் ஒன்றுக்கு 90 lpcd குடிநீர் விநியோகம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2012–13 ஆம் ஆண்டு கம்பம் நகருக்கு மட்டும் தனியாக நகராட்சி எல்லையில் இருந்து சுமார் 18.00 கி. மீ தொலைவில் உள்ள முல்லைபெரியார் ஆற்றுப்படுகையில் லோயர்கேம்ப் பகுதியில் இருந்து குடிநீர் அபிவிருத்தி திட்டம் உருவாக்கி பார்வை **2** ன் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் முடிவுற்று ஓர் ஆண்டு காலம் சோதனை ஓட்டம் முடித்து 17.04.2020– ல் லோயர்கேம்ப் தலைமை நீரேற்று நிலையத்தை, இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை நகராட்சியே செய்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்படைப்பு செய்யப்பட்டது.<br>இந்நிலையில் கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் விநியோகத்தில் கீழ்கண்ட மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் ஏற்றம் செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவைகள் விபரம் கீழ்கண்டவாறு.<br>**I. மேல்நிலை தொட்டி விபரம் :– ( Overhead water tanks)** |

| வ.எண் | மேல்நிலை/தரைமட்ட தொட்டி விபரம் | கொள்ளளவு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நந்தகோபால்சாமி தெரு மேல்நிலைத் தொட்டி | 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 2. | நந்தகோபால்சாமி தெரு தரைமட்ட தொட்டி | 3.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 3. | காந்திநகர் மேல்நிலைத் தொட்டி | 2.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 4. | மணிநகரம் (T.S.K. layout) மேல்நிலைத் தொட்டி | 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 5. | T.S.K. layout ( ஏகலூத்து ரோடு) மேல்நிலைத் தொட்டி | 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 6. | கம்பம்மெட்டு காலனி மேல்நிலைத் தொட்டி | 1.60 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |

| | | |
|---|---|---|
| 7. | தாத்தப்பன்குளம் (நகராட்சி பள்ளி வளாகம்) மேல்நிலைத் தொட்டி | 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 8. | விவேகானந்தர் தெரு –சுப்பிரமணிசாமி கோவில் தெரு சந்திப்பு மேல்நிலைத் தொட்டி | 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 9. | உலகத்தேவர் தெரு கள்ளர்பள்ளி வடபுறம் மேல்நிலைத்தொட்டி | 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 10 | நகராட்சி வாரச்சந்தை மேல்நிலைத்தொட்டி | 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 11. | L.F. ரோடு RMTC வடபுறம் மேல்நிலைத் தொட்டி | 0.30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |

மேற்கண்ட 10 இடங்களில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளை தினசரி பராமரிப்பு பணிகள் செய்திட நகராட்சியில் போதுமான பணியாளர்கள்,பணியிடங்கள் இல்லை. மேலும், இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்படும் குடிநீர் குழாய்கள் விபரம் பின்வருமாறு.,

**II) பிரதான குடிநீர் குழாய் :– (Pumping main)**

| வ.எண் | பிரதான குடிநீர் குழாய் விபரம் | பிரதான குழாயின் விட்டம் | நீளம் (கி.மீ) |
|---|---|---|---|
| a) | River to Raw Water Tank (Pumping main) | 400 mm Φ DI pipe | 0.651 Km |
| b) | Gravity main (Lower filter bed to Cumbum municipal limit) | 400 mm Φ DI pipe | 14.504 km |
| c) | Gravity main (Lower filter bed to Cumbum municipal limit) | 350 mm Φ DI pipe | 1.426 km |
| d) | Gravity main (Lower filter bed to Cumbum municipal limit) | 250 mm Φ DI pipe | 0.305 km |
| e) | Gravity main (Lower filter bed to Cumbum municipal limit) | 150 mm Φ DI pipe | 0.150 km |
| | Feed main and Branch Feeder main | 250 mm Φ DI pipe | 0.098 km |
| | Feed main and Branch Feeder main | 200 mm Φ DI pipe | 1.120 km |
| | Feed main and Branch Feeder main | 150 mm Φ DI pipe | 2.806 km |
| | Feed main and Branch Feeder main | 100 mm Φ DI pipe | 0.535 km |
| | | **Total** | **21.595 km** |

**III) குடிநீர் பகிர்மான குழாய் (Distribution main)**

| வ.எண் | பகிர்மான குழாய் விபரம் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | 300 mm Φ AC pipe | 2.00km |
| 2 | 250mm Φ AC pipe | 5.00km |
| 3 | 150mm Φ AC pipe | 15.00km |
| 4 | 140mm Φ AC pipe | 30.00km |
| 5 | 110mm Φ PVC pipe | 30.00km |
| 6 | 90mm Φ PVC pipe | 20.00km |
| | **Total** | **102.00km** |

ஆகமொத்தம் நகராட்சி மூலம் 123.595 கி.மீ நீளம் குடிநீர் குழாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**IV) குடிநீர் குழாய் வால்வுகள்:– ( Valves)**

| வ.எண் | வால்வு வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | **சூலீஸ் வால்வ் (Sluice Valve)** | |
| | 250mm | 2No's |
| | 200mm | 2No's |
| | 150mm | 5No's |
| | 100mm | 3No's |
| 2. | **ஏர் வால்வ் (Air Valve)** | |
| | 50mm double air valve/150mm | 3No's |
| | 50mm double air valve/200mm | 3No's |
| | 80mm double air valve/200mm | 3No's |
| | 100mm double air valve/400mm | 18 No's |
| 3. | **ஸ்கவர் வால்வ் (Scour Valve)** | |
| | 250 mm double air valve/400m DI | 6 No's |
| 4. | **கேட் வால்வ் (Gate valve)** | |
| | 90 mm Gate valve | 99 No's |
| | 125 mm Gate valve | 9 No's |

மேற்கண்ட விபரப்படி பிரதான குடிநீர் குழாய் மற்றும் பகிர்மான குடிநீர் குழாய் மற்றும் வால்வுகள் மூலம் கம்பம் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கம்பம் நகராட்சி குடிநீர் பணிகளை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் சுகாதார பிரிவு மூலம் உள்ள துாய்மை பணியாளர்களை கொண்டு இயக்குவதில் பல்வேறு சிரமங்கள் உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 17.04.2020 அன்று லோயர் கேம்ப் தலைமை குடிநீர் நிலையத்தை நகராட்சியிடம் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகளை செய்ய ஒப்படைப்பு செய்ததால் நாளது தேதி முதல் நகராட்சியே குடிநீர் விநியோகத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டி உள்ளதால், நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தனியார் நிறுவனம் மூலம் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகள் செய்வதற்கு கீழ்கண்டவாறு அட்டவணை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கம்பம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் 2020**

**I. கம்பம் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வழங்க ஆகும் செலவு தொகை (மின் கட்டணம் உட்பட)**

| | |
|---|---|
| 1. | மாதந்தோறும் பராமரிப்பு மற்றும் குடிநீர் கட்டணங்களுக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோரும் தொகை **(தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் அவர்களின் கடித எண்: கோ.கம்பம் குடிநீர்/ வஅ/கிகுதி/தேனி/2020 நாள் : 17.04.2020)**<br>ஒரு மாதத்திற்கு செலவினம் ரூ. 15.00 இலட்சம்<br>ஆண்டு ஒன்றுக்கு செலவினம் ரூ. 180.00 இலட்சம் |

**II. நகராட்சி நிர்வாகம் மூலம் குடிநீர் பராமரிப்பு செய்திட வருடாந்திர செலவு அரசாணை எண். 198, நாள். 26.10.1998 ( மின் கட்டணம் உட்பட)**

| | | |
|---|---|---|
| 1. | உதவியாளர் (365 x 426) | 1 |
| 2. | வடிகட்டி படுகை இயக்குபவர்<br>( 8 Hrs per day one person ) | 3 |
| 3. | தலைமை நீரேற்று நிலைய பொருத்துநர் | 1 |
| 4. | எலக்ட்ரீஷியன் Grade I<br>( 8 Hrs per day one person ) | 3 |
| 5. | மின்னியல் கண்காணிப்பாளர் | 1 |
| 6. | காவல்காரர் | 1 |
| 7. | நகர் பகுதியிலுள்ள மேல்நிலை தொட்டி காவலர் | 20 |
| 8. | வால்வு இயக்குபவர் | 8 |
| | **ஒரு ஆண்டிற்கு பணியாளர் ஊதியம் + குளோரின் சிலிண்டர் (GST உட்பட)** | **ரூ. 77. 50 இலட்சம்** |
| | **ஆ) மின் கட்டணம் (75Hp, 1 No's) (ஆண்டிற்கு )** | **ரூ.31.00 இலட்சம்** |
| | **மொத்தம்** | ரூ.108.50 (say)<br>**109.00 இலட்சம்** |

**III. கம்பம் நகராட்சி மூலம் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி மூலம் குடிநீர் வழங்க செலவினம் ( மின் கட்டணம் உட்பட)**

| | | |
|---|---|---|
| 1 | வடிகட்டி படுகை இயக்குபவர்<br>( 8 Hrs per day one person ) | 3 |
| 2 | தலைமை நீரேற்று நிலைய பொருத்துநர் | 1 |
| 3 | எலக்ட்ரீஷியன் Grade I<br>( 8 Hrs per day one person ) | 3 |
| 4 | காவல்காரர் ( including day shift) | 1 |
| 5 | நகர் பகுதியிலுள்ள மேல்நிலை தொட்டி இரவு காவலர் | 10 |
| | **ஒரு ஆண்டிற்கு பணியாளர் ஊதியம் + குளோரின் சிலிண்டர் (GST உட்பட)** | **ரூ. 43.30 இலட்சம்** |
| | **ஆ) மின் கட்டணம் (75Hp, 1 No's) (ஆண்டிற்கு )** | **ரூ.31.00 இலட்சம்** |
| | **மொத்தம்** | ரூ. 74.30 (say)<br>**75.00 இலட்சம்** |

மேற்படி பணிகளை அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மேற்படி பணிகளை தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான செலவுத் தொகை **ரூ. 75.00 இலட்சத்திற்கு** ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஏதுவாக நகராட்சி மண்டல செயற்பொறியாளர் அவர்கள் மூலமாக தலைமை பொறியாளர் ஒப்புதல் பெற்று வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான கருத்துருவினை அனுப்பிவைக்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** பொதுமக்களின் குடிநீர் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், சென்னை, தலைமை பொறியாளர் அவர்களின் உரிய ஒப்புதல் பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17, அம்பேத்கார் தெருவில் வசிக்கும் பொதுமக்கள் அவ்விடத்தில் உள்ள ஓடை பகுதியில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தினை பயன்படுத்தி வரும் நிலையில் , கழிப்பிடத்தில் உள்ள கோப்பைகள் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளதால், மேற்படி இடத்தில் புதிதாக 10 எண்ணம் கோப்பைகள் அமைத்திடவும், சின்டெக்ஸ் டேங்க் மற்றும் டைல்ஸ் அமைத்திட வேண்டியுள்ளது. அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம்.

5. கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை தொட்டி வளாகத்தில் காவலர் அறை இல்லாமலும், ஒரு சில மேல்நிலை தொட்டி வளாகத்தில் இடிந்து பாழடைந்த நிலையில் உள்ளதாலும் மேற்படி இடங்களை ஆய்வு செய்ததில் குடிநீர் பணிபணியாளர்கள் பாதுகாப்பு கருதியும், வெளி நபர்கள் யாரும் உள்ளே நுழையாத வகையில், எவ்வித உயிர்சேதம் ஏற்படாவண்ணம் இருக்கும் பொருட்டு கீழ்குறிப்பிட்டுள்ள மேல்நிலை தொட்டி வளாகங்களில் காவலர் அறை, கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் செய்திடவும், அதற்காகும் உத்தேச மதிப்பீட்டு தொகைக்கும், செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கள்ளர் பள்ளி வடக்கு பக்கம் உள்ள மேல்நிலை தொட்டி வளாகத்தில் காவலர் அறை, கழிப்பறை மற்றும் நடைபாதை அமைக்கும் பணி | 2.00 |
| 2. | கம்பம்மெட்டு காலனியில் உள்ள மேல்நிலை தொட்டி வளாகத்தில் காவலர் குடியிருப்பு, சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைக்கும் பணி | 4.00 |
| 3. | மணிநகர் மேல்நிலை தொட்டி வளாகத்தில் காவலர் அறை , கழிவறை மற்றும் நடைபாதை அமைக்கும் பணி | 2.00 |
| 4. | ஏகலூத்து ரோடு டி.எஸ்.கே. நகர் லே–அவுட்டில் உள்ள மேல்நிலை தொட்டி வளாகத்தில் காவலர் அறை கழிவறை மற்றும் நடைபாதை அமைக்கும் பணி | 2.00 |

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.

6. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையில் பிரேதங்களை எரியூட்டுவதில் பயன்படுத்தி வரும் உபகரணங்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதால் பிரேதங்களை எரியூட்டுவதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே, சுகாதார நலன் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் நவீன எரிவாயு தகன மேடையில் பழுது ஏற்பட்டுள்ள உபகரணங்களை சரிசெய்யவும், முற்றிலும் சேதமடைந்த உபகரணங்களை மாற்றிடவும், உபகரணங்கள் சப்ளை செய்திட கோரியும் , மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 3,00,000/– க்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்

**7.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.**2034** நாள்.**29.05.2020** தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளபடி நகராட்சி லோயர்கேம்ப் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள், படுக்கை வடிகட்டிகள், வால்வுகள், கேஸ் குளோரினேசன் இயந்திரங்கள் ஆகியவற்றை நான்கு மாதங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை உரிய பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூபாய் **9,80,000/** மதிப்பீட்டில் செய்திட **25.06.2020**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி விபரம்** | **மதிப்பீட்டைவிட** | |
|---|---|---|---|
| | | **சதவீதம் குறைவு** | **சதவீதம் கூடுதல்** |
| 1. | திரு.எல்.ராஜேந்திரன் | 0.05 | – |
| 2. | திரு.வி.கிருஷ்ணன் | – | 0.34 |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.05** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.எல்.ராஜேந்திரன் என்பவரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**8.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.**2035** நாள்.**29.05.2020** தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளபடி இந்நகராட்சி வார்டு எண்31,நந்தகோபால்சாமி நகர் மற்றும் வார்டு எண்– 30 ஆங்கூர்பாளையம் ரோடு ஆகிய இரண்டு இடங்களில் உள்ள நுண்உர செயலாக்க மையங்களுக்கு தண்ணீர் வசதி செய்திட ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் அமைக்கும் பணிக்கு ரூபாய் **4,50,000/–** மதீப்பீட்டில் பணிகள் செய்ய **17.06.2020**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி விபரம்** | **மதிப்பீட்டைவிட** | |
|---|---|---|---|
| | | **சதவீதம் குறைவு** | **சதவீதம் கூடுதல்** |
| 1. | திரு.எல்.ராஜேந்திரன் | –0.24 | – |
| 2. | திரு.வி.கிருஷ்ணன் | –0.09 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **–0.24** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.எல்.ராஜேந்திரன் என்பவரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**9.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.**2040** நாள்.**29.05.2020** தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளபடி இந்நகராட்சி எல்லைகுட்பட்ட வார்டு எண்.**31** கக்கன்ஜி காலனியில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் மேற்கண்ட பணிகள் செய்யும் போது 3” மற்றும் **5”** பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் இணைப்புகள் பழுதாகி உள்ளது.புதிதாக 5”PVC பைப் மற்றும் 3”PVC பைப் மெயின் தெரு மற்றும் குறுக்கு சந்துக்கள் பதிக்கவும், குறுக்கு சந்துக்களில் பதிக்கப்பட்ட மெயின் பைப்பில் வீட்டு இணைப்புக்கள் வழங்கவும், வார்டு3ல் குரங்குமாயன் தெரு மற்றும் வார்டு 30 மஞ்சக்குளம் ரோட்டில்3”PVC பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு ரூபாய் **5,80,000/** மதிப்பீட்டில் செய்திட **24.06.2020**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி விபரம்** | **மதிப்பீட்டைவிட** | |
|---|---|---|---|
| | | **சதவீதம் குறைவு** | **சதவீதம் கூடுதல்** |
| 1. | திரு.எல்.ராஜேந்திரன் | 0.11 | – |
| 2. | திரு.வி.கிருஷ்ணன் | – | 0.45 |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.11** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.எல்.ராஜேந்திரன் என்பவரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 10. | இந்நகராட்சி வார்டு எண் 8 கோம்பைதெருவில் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்டுள்ள சிறு மின் விசைபம்பு அறை கட்டுமானம் பழுதாகி ஆபத்தான நிலையில் உள்ளதை இடித்து அகற்றிவிட்டு புதியதாக RCC Pillar அமைத்து 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சிறு மின் விசைபம்பு ஏற்படுத்தவும், மேற்படி பணிகள் நடைபெறும் வரை மின் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்திடவும் அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூபாய் 125000/–க்கும், (ரூபாய் ஒருஇலட்சத்தி இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மேற்படி பணி செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு.. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை 2020–2021 ஆம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| 11. | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110 இன் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை தூய்மை பணியாளர்கள் (Cleanliness Workers) என அழைப்பது குறித்து ஆணை வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப 3) துறை, நாள் 21.05.2020 ஐ மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.** |
| 12. | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN60 T 4524 டம்பர் பிளேசர் லாரிக்கு 18.07.2020 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ. 1,60,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு.. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர , அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1408/2020/எச்1) |
| 13. | இந்நகர்மன்ற தீர்மான எண். 2021, நாள். 31.03.2020–இன் படி, உலகளவில் கொரோனா வைரஸ் (COVID-19) தொற்று பரவி வருவதால், கம்பம் நகராட்சி பகுதிகளில் வைரஸ் (COVID-19) தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 30.00 (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டது. ஆனால் தற்போது கம்பம் நகராட்சி பகுதிகளில் கொரோன வைரஸ் (COVID-19) தொற்று அதிகமாக பரவுவதை தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு கூடுதல் செலவினம் ரூ. 98.00 (ரூபாய் தொன்னூற்று எட்டு இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு.. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர , அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 0844/2020/எச்1) |

**ஒப்பம்/– திருமதி. ரா. கமலா**
**ஆணையாளர்,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 30.06. 2020**
**இடம். கம்பம்**